# சரஸ்வதி

KVC0041

(துரைத்தனத்தார் அங்கீகாரம் பெற்றது.)

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
புக்ஸெல்லர் அண்டு பப்ளிஷர்
திருநெல்வேலி ஜங்ஷன்



[விலை அணா 3

Approved by the Text - Book Committee, Madras.
Vide Fort St. George Gazette Part — 1 B, Page 225.
Dated, 24th April 1934.

# முன்னுரை

நவராத்திரி விரதம் நமது நாட்டில் நடைபெறும் முக்கியமான விசேஷங்களில் ஒன்ருகும். இந்த விரதம் ஒவ்வோர் ஆண்டிலும் புரட்டாசி மாதம் மகாளய அமாவாசைக்குப் பின் அநுஷ்டிக்கப்படுகிறது. இந்த விரதத்தைச் சைவர் வைஷ்ணவர் என்ற வேற்றுமையின்றி இந்துக்கள் அனைவரும் அநுஷ்டிக்கிருர்கள். சாதாரணமாக இவ்விரதம் 'மா நோன்பு' என்றே வழங்கப்படுகிறது.

இவ்விரதத்தின் ஒன்பதாம் நாளாகிய மகா நவமியில் வித்தைக்கு அதிதேவதையாகிய சரஸ்வதி தேவியை வழிபடுவதும் பத்தாம் நாளாகிய விஜய தசமியில் சிறுவர்களுக்கு அக்ஷராப்பியாசம் செய்விப்பதும் அரசர்கள் தங்கள் அரண்மனைகளில் இந்த மகாநவமி விசேஷத்தை அநுஷ்டிப்பதும் காலங்கண்ட வழக்கம். சிவகாமி யாண்டார் சிவபெருமானுக்குச் சாத்தக்கொண்டு சென்ற திருப்பூங் கூடையைச் சோழ மன்னனது பட்டவர்த்தன யானை பறித்துப் பூவைச் சிந்தின நாள் "கோலம் பெருகு மா நவமி முன்னுள்" என்று ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்கிருர்கள். குலாம் ஹுஸேன் என்னும் மகமதிய ஆசிரியர் நவராத்திரி விசேஷத்தை இந்துக்களோடு கலந்து மகமதியர்களும் அநுஷ்டித்து வந்ததாகக் கூறுகின்ருர். மகா நவமியுள்ளிட்ட நவராத்திரியின் வரலாறு யாவரும் அறியவேண்டிய தொன்றே.

இச்சிறு நூலில் நவராத்திரியின் வரலாறும் சரஸ்வதி தேவியை வழிபடும் முறையும் விஜயதசமியின் சிறப்பும் சிறுவர்களுக்கு ஏற்றவிதமாக எழுதப்பட்டிருக்கின்றன. சிறுவர் கல்வியில் உழைத்துவரும் பெரியோர்கள் இவ்வெளியீட்டை முற்றிலும் ஆதரிப்பார்களென்பது எனது நம்பிக்கை.

பிரசுர கர்த்தர்

# பொருளடக்கம்

# ச ர ஸ் வ தி

——:o:——

## 1. 'ஒன்பது இரவு' என்னும் நவராத்திரி

இந்து ஜனங்கள் கொண்டாடும் முக்கியமான பண்டிகைகளில் நவராத்திரியும் ஒன்ருகும். நவராத்திரி என்னும் பதம், ஒன்பது இரவு என்று பொருள் தரும். இது தமிழ் மாதமாகிய புரட்டாசி மாதத்தில் கொண்டாடப்படுவது வழக்கம்; சில ஆண்டுகளில் ஐப்பசி மாதத்திலும் கொண்டாடப் படுவதுண்டு. பண்டிகையின் ஒன்பதாவது நாள் மகா நவமி என்றும், பத்தாவது நாள் விஜய தசமி என்றும் சொல்லப் படுகின்றன.

இப் பண்டிகை கொண்டாடப்பெறும் ஒன்பது நாட்களிலும் இரவிலே, இந்துக்களின் வீடுகளில், தெய்வப் படங்களையும் அழகான பொம்மைகளையும் பல வேறு பதுமைகளையும் வரிசை வரிசையாகச் சிங்காரித்து வைப்பார்கள். இவ்வாறு கொலு அமைத்து, அழகிய

பொம்மைகள் பதுமைகள் படங்களுக்கிடையே தெய்விக வடிவங்களையும் அலங்கரித்து வைப்பார்கள். இதை அம்மன் கோலு இருக்கை என்று கூறுவதுண்டு.

சிவராத்திரியைப் போல் நவராத்திரியும் இரவையே விசேஷமாகக்கொண்டதென்று நாம் ஊகிக்கலாம். சில சமயங்களில் இப்பண்டிகை பத்து நாள் கொண்டாடப்படுவதுமுண்டு. அப்பொழுது இது தசரா என்றும் பெயர் பெறும். தசரா என்பது தசராத்திரி அல்லது பத்து இரவு என்று பொருள் தருவதாகும்.

'அம்மன் கொலு இருக்கை' யைக் குறிக்கும் இத்தினங்கள், மூன்று பாகமாகப் பிரிக்கப் படுகின்றன; இவை தேவியின் அம்சங்களான துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி என்னும் மூன்று தெய்வங்களின் விசேஷ தினங்களாகக் கொண்டாடப்படுகின்றன. முதல் மூன்று நாள் துர்க்கைக்கும், அடுத்த மூன்று நாள் இலட்சுமிக்கும், கடைசி மூன்று நாள் சரஸ்வதிக்கும், உரிய விசேஷ தினங்களாகும். இவ்வொன்பது தினங்களிலும் தேவியை உபாசிக்கும் வசதியும் சக்தியும் பெறுதவர்கள், நவராத்திரியின் கடைசி நாளாகிய மகா நவமி தினத்திலாவது துர்க்கைக்குரிய ஆயுதங்களையும், இலட்சுமிக்குரிய இரத்தி

னங்களேயும், சரஸ்வதிக்குரிய ஏடுகளேயும் வைத்துப் பூசித்தல் வேண்டும்.

எனினும், மகாநவமி சரஸ்வதி தேவிக்கே விசேஷமாக உரியதாகும். இத்தினத்தில் நம் மக்கள் வீட்டிலிருக்கும் ஏடுகள் அல்லது புத்தகங்களே யெல்லாம் ஒழுங்காக அடுக்கிக் 'கொலு' வைத்துக், காலே முதல் உபவாசமிருந்து சரஸ்வதி பூஜை செய்வார்கள். இந்த மகாநவமி தினத்திலாவது தொழிலாளர்கள், தங்களுக்கு ஏடுகளேப் போலிருக்கும் ஆயுதங்களே வைத்துத் தங்கள் 'சரஸ்வதி'யைப் பூஜிப்பார்கள். இப் பூஜைக்கு 'ஆயுதபூஜை' என்றும் ஒரு பெயருண்டு. தற்காலத்தில் போலீஸ்காரர்கள் தங்களுடைய துப்பாக்கி, கத்தி, குறுந்தடி முதலிய ஆயுதங்களேயும் வைத்துப் பூஜை செய்வதுண்டு.

நவராத்திரியில் சரஸ்வதி பிரம தேவனே நோக்கித் தவம் செய்தனளாம். இவ்வாறு சரஸ்வதியின் சம்பந்தம் நவராத்திரிக்கு ஏற்பட்டிருப்பதால், இப் பண்டிகை, சைவர் வைணவர் முதலான சகல இந்து மக்களுக்கும் பொதுவான பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. இது நமது நாட்டிலுள்ள சிவஆலயம் முதலான ஆலயங்களிலெல்லாம் ஓர் அரிய பெரிய உற்சவமாகக் கொண்டாடப்படுகிறது. ஆண்களோடு பெண்களும் இவ்விழாவைக் கொண்டாடுகிறுர்

கள். மைசூர் புதுக்கோட்டை முதலிய சுதேச சமஸ்தானங்களில் இப்பண்டிகை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. எனினும் சாதாரண ஜனங்களும் விசேஷமான பக்தியோடுஇதனை அனுஷ்டித்து வருகிறார்கள்.

நவராத்திரி காலங்களில், மாலைப் பொழுதிலும் இரவின் முற்பகுதியிலும் பெண்கள், 'அம்மன் கொலு' வைத்துப் பாட்டுப் பாடி மகிழ்வதும், கொலுவைக் கண்டு களிக்க வரும் பெண்மணிகளுக்கும் குழந்தைகளுக்கும் சந்தனம் குங்குமம் மலர் முதலியவற்றோடு பலவேறு தின்பண்டங்களும் வழங்கி உபசரிப்பதும், ஆனந்தக்காட்சியாகவே யிருக்கும். நாடு நகரங்களிலுள்ள ஜனங்கள் தத்தம் நிலைமைக்குத் தகுந்தபடி 'கொலு' வைப்பதால், அழகுப் பொருள்களின் பல வேறு காட்சிகளைக் காண விரும்புவோர் பலவேறு வீடுகளையும் பல வேறு இடங்களையும் சென்று கண்ணுற்று ஆனந்திப்பது வழக்கம். நவராத்திரி காலத்தில் பெண்களுக்கு ஆண் வேஷமும் ஆண்பிள்ளைகளுக்குப் பெண் வேஷமும்போட்டுத், 'தமாஷா'க்காலம் கழிப்பது முண்டு.

தேவாலயங்களிலும், கொலு வைப்பதோடு, அம்மனுக்கு நாள் ஒரு மேனியாக அலங்காரம்

செய்து வைப்பார்கள். சிலர், இந் நவராத்திரி காலத்தில், இராமாயணம், பாகவதம், கந்தபுராணம் முதலான திவ்விய கதைகளைப் படிப்பார்கள் அல்லது கேட்பார்கள். இக்காலங்களில் எந்த வகையிலாவது தங்கள் வீடு மங்களமாகவும் அழகாகவும் வைத்துக்கொண்டால் காரிய சித்தியும் இம்மை மறுமை இன்பங்களும் உண்டாகும் என்பது இந்துக்களின் நம்பிக்கை. மற்றக் காலங்களில் இவ்வாறு செய்வதைப் பார்க்கிலும் நவராத்திரி காலத்தில் செய்வது நூறு மடங்கு அதிகமான நலனும் பலனும் தரும் என்றும் நம் மக்கள் நம்புகிறார்கள்.

இப் பண்டிகையைச் சார்ந்த ஒன்பது நாளிலும், கிராமப் பள்ளிக்கூடங்களிலுள்ள உபாத்தியாயர்களும் மாணாக்கர் - மாணாக்கியர்களும் நூதன உடைகள் அணிந்து சென்று தங்கள் கிராமங்களிலும் அருகேயுள்ள கிராமங்களிலும் பாடல்களோடு பின்னல் கோலாட்டம் முதலிய கோல்-விளையாட்டுகள் விளையாடுவார்கள். அப்பொழுது செல்வர்கள் பரிசுகள் வழங்கி, அவர்களை உற்சாகப் படுத்துவார்கள்.

---

# 2. நவராத்திரியைக் குறிக்கும் புராண கதைகள்

## மஹிஷாசுர வதம்

முன்னொரு காலத்தில் மஹிஷாசுரன் என்னும் துஷ்ட அசுரன் ஒருவன் இருந்தான். 'மஹிஷம்' என்பது எருமை என்று பொருள் தரும். அசுரன், காட்டெருமைபோல் கொழுத்து மந்த புத்தியுள்ளவனாக இருந்ததால், மஹிஷாசுரன் அல்லது 'எருமை யசுரன்' என்று பெயர் பெற்றான்.

மஹிஷாசுரன் அறிஞர்களுக்கும் சாது ஜனங்களுக்கும் பல வகையிலும் அல்லல் விளைவித்து வந்தான். மஹிஷாசுரனை அழித்து உலகத்திலே அறிவையும் அருளையும் பரப்புவதற்காக எத்தனையோ முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால் அவனை வதஞ் செய்வதற்கு மக்களிலாவது தேவர்களிலாவது ஒருவரும் திறமை வாய்ந்தவராகக் காணப்படவில்லை.

மஹிஷாசுரனுக்கு அஞ்சி மகாவிஷ்ணு பரமசிவன் பிரமதேவன் என்ற மும்மூர்த்திகளுங்கூட ஜீவர்களைக் கைவிடத் துணிந்தனர். அக்காலத்தில் மகாவிஷ்ணுவின் பத்தினியான மகாலட்சுமியும், பரமேச்வரன் பத்தினியான



மகிஷாசுரன் வதை.

பார்வதிதேவியும், பிரமதேவனது பத்தினி யாகிய சரஸ்வதி தேவியும் மஹிஷாசுரனை எவ்வாறுகொல்வதென்று கலந்து ஆலோசனை செய்தார்கள். அவர்கள் தங்கள் மூன்று ரூபங் களையும் மறைத்து ஓர் உருவமாகித் துர்க்காதேவி என்னும் நாமத்தோடு அசுரனை வதஞ் செய்யப் புறப்பட்டார்கள். அசுரனோடு போர் தொடுப் பதற்கு முன் ஒன்பது நாள் 'நவராத்திரி' என்னும் நோன்பை அனுசரித்துத் தவம் கிடந்தார்கள்.

கடைசி நாளில் துர்க்கா தேவிக்கும் மஹி ஷாசுரனுக்கும் கடும் போர் விளைந்தது. துர்க்கா தேவி பேய்க்கோலத்தோடு வாளை யுருவிக் கையில் பிடித்துக்கொண்டு சிங்கத்தின் முதுகின் மேல் ஏறி வந்தாள். அவளைச் சூழ்ந்து ஆயிரம் பேய்கள் தலைவிரி கோலமாக வந்தன. அக் காட்சியைக் கண்ட அசுரர்கள் நடுநடுங்கி ஓடிப் போயினர்.

மஹிஷாசுரன் மாத்திரம் பயப்படவில்லை. அவன் காட்டெருமை வடிவத்தோடு தேவி யைக் கொம்பால் தாக்கிக் கிழித்தெறிய வேண்டு மென்று அசைந்து அசைந்து வந்து கொண் டிருந்தான். அப்போது தேவி கோபச் சிரிப் போடு எருமைத் தலையின் மேல் தன் அடி களால் மிதித்தாள். உடனே அசுரன் 'ஆ'

என்று அலறிக்கொண்டு கீழே விழுந்து உயிர் துறந்தான்.

அப்பால் தேவர்களும் முனிவர்களும் தேவியைத் தோத்திரஞ் செய்தார்கள். மஹிஷாசுர வதம் செய்து உலகத்தைக் காப்பாற்றிய துர்க்காதேவி, தன் பேய்க் கோலத்தைத் துறந்து, மோகன வடிவத்தோடு அவர்கள் முன் தோன்றி, நவராத்திரியின் உட்பொருளை நன்கு விளக்கினுள். மேலும் அப்புண்ணிய காலத்தில் ஜனங்கள் இலட்சுமி பார்வதி சரஸ்வ்தி என்னும் மூன்று தேவிகளையும் பூஜிக்க வேண்டு மென்றும் கட்டளையிட்டாள்.

மைசூர் ஆதியில் 'மஹிஷாசுரபுர' மாயிருந்த தென்றும் மைசூரிலேதான் துர்க்கா தேவி மஹிஷாசுர வதம் செய்தனளென்றும் ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிறுர்கள். மைசூர் இராஜ்யத்தில் இப்பண்டிகை விசேஷமாகக் கொண்டாடப்படுவதற்கு இதுவே முக்கியமான காரணமாகும். துர்க்கா தேவியைக் குலதெய்வமாகக் கொண்ட வேறு மகாராஜாக்களின் சமஸ்தானங்களிலும் இப் பண்டிகை விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

நெடுங் காலமாக நமது நாட்டார் துர்க்கா தேவியைப் பல வேறு பெயர்களால் வழிபட்டு வந்தார்கள். இவளே அழகுத் தெய்வமாகிய

இலட்சுமியாகவும், அருளின் தெய்வமாகிய பார்வதியாகவும், அறிவுத் தெய்வமாகிய சரஸ்வதியாகவும் காட்சி தருகிருள். எனினும் துர்க்கா தேவி முக்கியமாகச் சரஸ்வதியின் வடிவமாக வருகிருள் என்று புராணம் கூறு கிறது.

---

## 3. சரஸ்வதியைக் குறிக்கும் கதைகள்

சரஸ்வதியை நமது புராணங்கள் படைப்புக் கடவுளான பிரம தேவனுடைய மனைவி யென்று வருணித்துப் பேசுகின்றன. படைப்பு அல்லது சிருஷ்டிக்கு அறிவு அல்லது வித்தை இன்றியமையாத தல்லவா ?

சரஸ்வதியைத் தவிர, பிரம தேவனுக்கு ஸாவித்திரி, காயத்திரி என்னும் வேறுமனைவியரும் உண்டு. ஒரு காலத்தில் நான்முகக் கடவுளாகிய பிரமன் தன் மனைவியர் மூவருடன் கூடிக் கங்கா ஸ்நானத்திற்குச் சென்ருன். அவர்கள் ஆகாய மார்க்கமாகச் சென்று கொண்டிருந்தனர். வழியில் ஒரு வித்தியாதரப் பெண், ஓர் மின்னற் கொடிபோல் நின்றுகொண்டு

புதுமையாகவும் இனிமையாகவும் பாடிக்கொண் டிருந்தாள்.

அவ்வாறு மின்னரசுபோல் நின்று பாடிக் கொண்டிருந்த மாதரசியின் பாட்டில் மனம் வைத்திருந்ததால், சரஸ்வதி சிறுது நேரம் தன் நாயகனே மறந்தாள்; சக்களத்தியரை மறந்தாள்; தன் பிரயாணத்தின் நோக்கத்தையும் மறந்தாள். சரஸ்வதி ஒழிந்த இருவரும், நாயகனுன பிரம தேவனேடு கங்கையை அடைந்து நீராடினர்.

சரஸ்வதி சற்றுத் தாமதித்துப் பிரம தேவ னிடஞ் சென்று, தான் வருமுன் கங்காஸ்நானம் செய்தது பற்றிக் கோபித்தாள். பிரமன் சரஸ் வதியை·நோக்கி இளநகை யரும்பி, "தேவியே! உன் விளையாட்டே உனக்குப் பெரிதாக இருக் கிறது. பாட்டிலும் கூத்திலும் நீ உன்னே மறந்து விடுகிருய். இன்று குற்றம் உன்மீ திருக்க, என்மீது கோபித்துக் கொள்ளுகிருய். ஆகையால் நான் உனக்கு இப்பொழுது ஒரு சாபம் கொடுக்கப் போகிறேன்" என்று அமைதி யாகப் பேசினுன்.

தன் நாயகன் தன்னே வெறுக்கிருன் என்று நினேத்து, சரஸ்வதி தேவி மனம் குழம்பி நின் ருள். அவள் மண்ணுலகில் உருவெடுத்துப் பிறத்தல் வேண்டும் என்று பிரமன் சாபம்கொடுத்

தான். பிரமன் தன்னை விலக்கிவிட விரும்புகிறு னென்று எண்ணி, அவள் புலம்பினுள். அவ ளுடைய மேனி, பளிச்சென்று மின்னும் மின்ன லைப்போல் துடிதுடித்தது. ஆனுல் சாபம் இன்னதென்று தெரிந்தவுடன் சரஸ்வதியின் மனம் ஒருவாறு ஆறுதல் அடைந்தது.

"பாட்டிலே ஈடுபட்டு நின்ற நீ உலகத்தில் புலவர் உருவாகத் தோன்றுதல் வேண்டும்" என்று பிரமன் சபித்தான். சரஸ்வதி, சாபத்தின் விவரத்தை முன் கூட்டி அறிந்து கொள்ள விரும்பினுள். அப்பொழுது பிரமன் "தமிழுலகத் தில் நாற்பத்தெட்டுப் புலவர் உருவாகத் தோன் றித் தமிழ் வளர்த்து வருக" என்று தேவியை நோக்கிக் காதலோடு சொன்னுன். சரஸ்வதி சந்தோஷமாகச் சாபத்தை ஏற்றுக்கொண்டாள்.

சரஸ்வதிதேவியின் அம்சமாகத் தோன்றிய தமிழ்ப் புலவர்களை நாம் சங்கப் புலவர்களென்று சொல்லுகிறேம். இவர்கள் அழகான பாடல் களைப் பாடியிருக்கிருர்கள். பெருந் தமிழ்க் கிழவி யாகிய ஔவையாரையும் நம் மக்கள் சரஸ்வதி யின் அம்சம் என்று போற்றுகிருர்கள். கம்பர் முதலிய மகா கவிகளும் சரஸ்வதியின் அருள் பெற்றவர்களே என்று நம்மவர் நம்புகிருர்கள்.

பிரமனை விஷ்ணு படைத்ததாகப் புராணம் கூறுகிறது. எனவே பிரமன் விஷ்ணுவின் புதல்

வனுகிருன். பிரமன் மனைவியான சரஸ்வதியை விஷ்ணுவின் தேவியான மகாலட்சுமியின் மருகி யென்று பௌராணிகர் உறவு முறை கற்பித்துப் பேசுகிருர். நமது நாட்டில் மாமியும் மருகியும் அடிக்கடி சண்டையிடுவது பழைய வழக்கமாத லால், இலட்சுமியும் சரஸ்வதியும் பூசலிடுவதுண் டென்றும் கதைகள் தோன்றின. இதனுலே இலட்சுமியுள்ள இடத்தில்-அதாவது பொருள் உள்ள இடத்தில், சரஸ்வதி - அதாவது கல்வி யறிவு காணப்படுவதில்லை யென்றும், சரஸ்வதி வசிக்கும் இடத்தில் இலட்சுமி சென்று சேர்வ தில்லையென்றும் நம் மக்கள் நம்புகிருர்கள்.

ஒரு காலத்தில்,மாறுகொண்ட சரஸ்வதியும் இலட்சுமியும் தங்களில் உயர்ந்தார் யார் என்று பிரமனைக் கேட்டனராம். பிரமன் அத்தேவியின் பெருமையை நன்குணராமல் இலட்சுமி தேவி யே உயர்ந்தவள் என்று வாய் கூசாது பேசின னும். அப்பொழுது பொங்கிக் கொதித்தெழுந்து கோரம் கொண்ட சரஸ்வதி நதியுருவாயினள் என்று புராணம் கூறுகிறது.

சரத் காலத்தில் பூசிக்கப்படுதலால், சரஸ் வதி சாரதை என்றும் பெயர் பெறுவள். பாரதி யென்றும் இவள் அழைக்கப்படுவதுண்டு. இவள் வாக்கின் சக்தியாக இருப்பதால் வாணி

என்றும், கலைவாணி என்றும் அழைக்கப்படுவது முண்டு. தமிழர் இத் தெய்வத்தைக் கலைமகள் என்றும் கலைமடந்தை என்றும் நாமகள் என்றும் தமிழ்வாணி என்றும் அழைப்பார்.

---

## 4. சரஸ்வதியின் வடிவம்

பிள்ளைகளே, சரஸ்வதியின் வடிவம் இந்துக்களுக்குச் சில உண்மைகளை வெளியிடுகிறது.

வெண்ணிறம்—அறிவுத்தெய்வமாகியசரஸ்வதி தேவியின் நிறம் வெண்ணிறம் என்று புராணம் கூறுகிறது. வெண்ணிறம் பரிசுத்தத்தைக் குறிக்கும். வெண்ணிற மேனியளான சரஸ்வதி வெள்ளை வஸ்திரம் தரித்திருக்கிறாள்; வெண்ணிறமான நகைகள் அணிந்திருக்கிறாள்; வெள்ளைத் தாமரையில் கொலுவீற்றிருக்கிறாள்.

"வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்"

என்று காளமேகப் புலவர் சரஸ்வதியை வர்ணித்திருக்கிறார்.

வெண்டாமரை — சரஸ்வதி வீற்றிருக்கும் வெண்டாமரை, "சுத்தமும் அறிவும் உள்ள இடத்தில் நாம் வீற்றிருப்போம்" என்று நிச்சயித் திருப்பதைக் காட்டுகிறது. தாமரை

மேல் வீற்றிருக்கும் சரஸ்வதிதேவியின் கண்ணும் முகமும் கையும் காலும் தாமரை போலவே இருக்கின்றன. உடம்பெல்லாம் படிக நிறம்; வாய் மாத்திரம் சிவந்து பவளம்போல் இருக்கிறது.

“படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோல் கையும்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத மும்துதித்தால்
கல்லும்சொல் லாதோ கவி”

என்று கவிஞன் வினவுகிறான். சரஸ்வதி தேவி தன் பவளவாய திறந்து உத்தமக் கவிஞருக்கு உபதேசம் செய்வதுண்டு என்பது நம்மவர் நம்பிக்கை.

உருவ அமைப்பு:—சரஸ்வதி தேவியின் உருவம் படிகம் அல்லது பளிங்கு போலக் களங்கமற் றிருக்கிறது. இப்படிப்பட்ட தேவியைக் களங்கமற்ற உள்ளத்தோடு உபாசிக்க வேண்டும் என்று பெரியோர் கூறுவர். சரஸ்வதிக்கு நான்கு கைகள் உண்டு. இந் நான்கு கைகளும் உலகத்து நான்கு திசைகளையும் குறிக்கும். இதனால் சரஸ்வதி தேவி நான்கு திசைகளிலும் நிறைந்திருப்பவள் என்பது தெளிவாகும்.

தேவி ஒரு கையில் ஏடும் (புத்தகம்) எழுத்தாணியும் தரித்திருக்கிறாள்; மற்றொன்றில் ஜப

மாலை வைத்திருக்கிறாள்; வேறு இரண்டுகைகளிலும் வீணை வைத்து வாசிக்கிறாள். இவ்வாறு எழுந்தருளியிருக்கும் தேவி எப்பொழுதும் படித்துக்கொண்டும் எழுதிக்கொண்டும் பாடிக்கொண்டும் ஜபம் செய்துகொண்டும் இருக்கிறாள்.

பிள்ளைகளே, இதன் உட்பொருளைச் சிந்தித்துப் பாருங்கள். கல்விப் பயிற்சிக்கு முடிவேயில்லை. அறிவுத் தெய்வமே எப்பொழுதும் படித்துக்கொண்டிருக்கிறாள் என்றால், நாமும் இடைவிடாமல் கல்வி கற்க வேண்டுமென்பது அவசியமல்லவா? படிக்கப் படிக்க அறிவு ஊறிக்கொண்டே யிருக்கும். அறிவுத் தெய்வம் படித்துக்கொண்டும் எழுதிக் கொண்டும் இருப்பது போல் ஜபம் செய்துகொண்டும் இருப்பதால், மக்களாகிய நாமும் கல்வி யறிவோடு பக்தி யுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

சரஸ்வதி தேவி ஆனந்தமாகப் பாடிக்கொண்டும் வீணை வாசித்துக் கொண்டும் இருக்கிறாள் அல்லவா? சங்கீதம் அவசியம் என்பதை இது குறிப்பிடுகிறது. தேவியின் கையிலுள்ள வீணை இசைக் கருவிகளை எல்லாம் குறிக்கும்.

——

## 5. சரஸ்வதி பூஜை

ஒவ்வொரு ஆண்டிலும் மஹாளய அமாவாசை முடிந்த மறுநாள் நவராத்திரிப் பண்டிகை தொடங்குகிறது. இது ஒன்பது நாள் இரவிலும் தொடர்ந்து நடைபெறும். நவராத்திரியின் ஒன்பதாம் நாள் சரஸ்வதி பூஜை நாள் என்று கூறப்படுகிறது.

அறியாமையை ஒழித்து வித்தையை வளர்க்க விரும்பும் ஜனங்கள் நவராத்திரி காலத்தில் இலட்சுமி, பார்வதி, சரஸ்வதி என்னும் மூன்று தேவிகளையும் பூஜித்துத் தங்கள் குழந்தைகளுக்குப் பத்தாம்நாளாகிய விஜயதசமியில் அட்சராப்பியாசச் சடங்கு செய்ய வேண்டுமென்று நம் முன்னோர் கருதினர். சரஸ்வதி பூஜை நாளில் படித்தல் கூடாது; தொழில் செய்வதும் கூடாது என்று நம்முன்னோர் நினைத்தார்கள். சரஸ்வதி பூஜைக்கு மறுநாள், தொழிலாளர்கள் தங்கள் தொழிலுக்குரிய கருவிகள் அல்லது ஆயுதங்களை உபயோகிப்பது வழக்கம்.

இனிச் சரஸ்வதி பூஜையின் உட்பொருளை ஆராய்வோம். கடவுளுக்கு ஆண் உருவமும் இல்லை; பெண் உருவமும் இல்லை; ஆனால் உலகிலுள்ள உயிர்களெல்லாம் ஆண் உருவ

மும் பெண் உருவமும் வாய்ந்தனவாகக் காணப் படுகின்றன. எனவே உயிர்களில் இருக்கும் கடவுளையும் இந்துக்கள் ஆண் உருவத்திலும் பெண் உருவத்திலும் வழிபடுகிறார்கள். அறிவுத் தெய்வமாகிய சரஸ்வதியை நம்மவர் பெண்ணாகக் கருதி வழிபடுகிறார்கள்.

மக்களாகிய நாம் பகுத்தறிவு உடையவர் களாக இருக்கிறோம். நம்மிடத்தில் இருக்கும் சரஸ்வதி நமது அறிவுத் திறமையேயாகும். இந்த அறிவுத் திறமையை நன்றாக வளர்த்து நல்ல வழியில் உபயோகித்துக் கொள்ளுதல் வேண்டும். இதுதான் சரஸ்வதி பூஜையின் உட்பொருள்.

ஆனால் இந்த உட்பொருளைப் பலரும் அறிவதில்லை. சரஸ்வதியைப் பூஜித்தால் நல்ல ஞானம் உண்டாகும் என்பது நமது பொது ஜனங்களின் நம்பிக்கை. இரவும் பகலும் எப் பொழுதும் சரஸ்வதியைத் துதித்தால், கவி தானே வரும் என்று கவிஞர்கள் கூறுகிறார்கள். காலை மாலை இவளைத் துதித்தால், அறிவு வள ரும் என்று மாணாக்கர்கள் வணங்குகிறார்கள். வேறு பலரோ சரஸ்வதி பூஜை நாளில்—அதா வது வருஷத்திற்கு ஒரு நாள்—ஏடுகளை வரிசை யாக அடுக்கிக் கலைமகள் வடிவமாக்கி வழிபடு

கிறார்கள்; அல்லது அழகாக அடுக்கப் பெற்றுள்ள புத்தகங்களின்மீது சரஸ்வதியின் படத்தை வைத்து மலர் தூவி மந்திரம் ஜபித்து வழிபாடு செய்கிறார்கள்.

மக்கள் ஒன்றுபட்டு நின்று சரஸ்வதி தேவிக்குப் பூஜைசெய்தல் வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் கல்விச் செல்வம் மலிந்து விளங்குதல் வேண்டும். நாடு நகரங்களிளெல்லாம் வீதிதோறும் பள்ளிச்சாலைகள் தழைத்தோங்குதல் வேண்டும். கல்வி மணம் கமழப் பெறாத மக்கள் மிருகங்களே யாவர். சோலைகள் செய்தல், சுனைகள் இயற்றல், சத்திரம்வைத்தல், கோவில் கட்டு வித்தல் முதலான தருமங்களெல்லாம் பள்ளிக்கூடம் வைத்து நடத்தும் தருமத்திற்கு ஈடாகுமா?

அன்னதானத்தைப் பார்க்கிலும் வித்தியா தானமே அதிக அளவில் புண்ணியம் தருவதாகும். ஆயிரம் அன்ன சத்திரம் வைத்து நடத்துவதைப் பார்க்கிலும் பதினாயிரம் கோவில் கட்டி நிறுத்துவதைப் பார்க்கிலும், ஓர் ஏழைக்கு எழுத்து அறிவிப்பதே அதிகமான நற்பயன் அளிக்கும்.

இவ்வுண்மையை உணர்ந்து, அறிவை, வளர்த்தல் வேண்டும்; அறிவோடு அறத்தை

யும் வளர்த்தல் வேண்டும். அறிவு, ஆண் பெண் என்னும் இரு பாலார்க்கும் இன்றியமை யாதது.

'தாயைப் போலவே பிள்ளை; நூலைப் போலவே சேலை' என்பது அனுபவம் பொதிந்த பழமொழி. கல்விப் பயிற்சி பெறும் தாய்மாரே, ஒரு நாட்டை முன்னேற்றம் அடையச் செய்யும் சக்தி வாய்ந்தவர். எனவே கல்வி, ஆண் மக்களுக்கு அவசியமாவது போலவே பெண் மக்களுக்கும் இன்றியமையாததாகும். அறிவுத் தெய்வமாகிய சரஸ்வதியைப் பெண்ணுருவில் வழிபட்ட நம் முன்னோர், பெண் மக்களுக்குக் கல்வி அவசியமானதென்பதை எவ்வளவு தெளிவாக உணர்ந்திருத்தல் வேண்டும்.

---

## 6. புதுக்கோட்டையில் நவராத்திரி

தென்னாட்டிலுள்ள சுதேச சமஸ்தானங்களில், நவராத்திரிப் பண்டிகையைச் சிறக்கக் கொண்டாடும் கீர்த்தி வாய்ந்தன புதுக்கோட்டையும் மைசூருமே.

பழைய தமிழ் அரசர் பரம்பரையைச் சார்ந்தவர் புதுக்கோட்டை மன்னர். அவர் நவராத்திரியைச் சிறப்பாகக் கொண்டாடுவதிலிருந்து, முன்னாளில் தமிழ் மன்னர்கள் இப்பண்டிகையை

எவ்வாறு கொண்டாடி யிருத்தல் வேண்டுமென் பதை நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

நவராத்திரி காலத்தில் சுற்றுப் பக்கத்தைச் சேர்ந்த பல கிராமங்களிலுமுள்ள ஜனங்கள் புதுக்கோட்டையை நோக்குகிறார்கள். நவராத்திரி ஒன்பது நாளிலும்—இரவிலும் பகலிலும்—கூட்டங் கூட்டமாக வந்துசேருவார்கள். ஆண்கள் பெண்கள் குழந்தைகள் முதலானவர்களெல்லாம் சமஸ்தானத்தின் விருந்தினர்களாகக் கருதப்படுகிறார்கள்.

ஒவ்வொருவருக்கும் சிறு படியால் ஒரு படி அரிசியும், சமஸ்தானத்தில் மாத்திரம் செலவாகும் 'அம்மன் காசு' நாலும் கொடுக்கப் படுகின்றன. விஜய தசமியன்று ஒரு படி அரிசியோடு காசுக்குப் பதிலாக இரண்டணாவும் கொடுக்கப்படுகிறது. இதைப் 'படி' போடுவது என்று சொல்லுகிறார்கள்.

அரண்மனைக்குள்ளிருக்கும் பெரிய சமவெளியில் பகல் மூன்று மணிக்குள் கூட்டம் கூடிவிடும். மூன்று மணிக்கு உரிய மூன்றும் குண்டு போட்டவுடன், 'படி' போடும்படி உத்தரவு வரும்.

சமவெளியின் நாற்புறமும், தட்டிகளால் அடைக்கப்பட்டிருக்கும்; அடைப்பிற்கு இடை

யே, ஜனங்கள் ஒவ்வொருவராக நுழைந்துவரத் தக்க வாசலும் அமைக்கப்பட்டிருக்கும்; படி போட உத்தரவு வந்தவுடனே, ஜனங்கள் ஒவ்வொருவராக இவ்வாசல் வழியே விடப்படுவார்கள்.

கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்காகச் சிலர் நியமிக்கப்படுகிறார்கள். இவர்களும் சமஸ்தானத்தைச் சார்ந்த போலீஸ்காரர்களும் ஜனங்களுக்குக் கஷ்டம் உண்டாகாதபடி கவனித்து வருகிறார்கள்.

சமஸ்தானம் சிறியதாயினும் புதுக்கோட்டை, இப்படிப்பட்ட சில பழைய வழக்கங்களைக் கைவிடாமல் அனுஷ்டித்து வருகிறது.

---

## 7. மைசூரில் தசரா

தென் இந்திய சுதேச சமஸ்தானங்களுள் மிகச் சிறந்து விளங்குவது மைசூரேயாகும்.

மைசூரில் ஒவ்வொரு வருஷத்திலும் நடைபெறும் தசரா - வைபவத்தைக் கண்டு களிக்கும் பொருட்டு, வெளியிடங்களிலிருந்து ஜனங்கள் திரள் திரளாகப் புறப்பட்டுப் போவார்கள். தசராவின் 'தமாஷா'ப் பார்ப்பதற்குப் பல ஆங்கிலேய கனவான்களும் சீமாட்டிகளும் மைசூருக்குச் செல்வதுண்டு.

இராக்காலத்தில் உயரமான இடத்தி லிருந்து அரண்மனையை நோக்குதல் வேண்டும். அப்பொழுது அது மின்சார விசையால் ஏற் பட்டிருக்கும் விசேஷ வெளிச்சத்தின் மகிமை யால், ஜோதியைக் கொண்டே செய்யப்பட்ட ஓர் அரண்மனைபோலத் தோன்றும். இந்த அரண் மனையிலே நவராத்திரி காலத்தில் ஒவ்வொரு நாளும் மகாராஜா மாலையில் அல்லது இரவின் முற்பகுதியில் சிங்காதனம் ஏறி வீற்றிருந்து, தர்பார் நடத்துவார்.

அரண்மனையின் மேல்-மாடத்தில் நடை பெறும் நிகழ்ச்சி ஒவ்வொன்றையும் வெளியி லுள்ள ஜனங்கள் சாவகாசமாகப் பார்த்து ஆனந்திக்கலாம். இதற்காக ஆசனங்கள் ஒழுங் காக அமைக்கப்படுகின்றன. சுமார் இரண்டு பர்லாங்கு தூரத்திலிருந்தாலும், அரண்மனை மேடைமேல் நடப்பவையெல்லாம் தெரியும்படி, மின்சார திபங்கள் அமைந்து விளங்குகின்றன.

சமஸ்தான உத்தியோகஸ்தர்கள் தங்களுக்கு உரிய சரிகை-உடைகளோடு தர்பாருக்குச் செல் வார்கள். உத்தியோகப் பற்றில்லாத (Non official) கனவான்கள், வெள்ளைக்கால்-சராய், கறுப்பு நீள அங்கி, சரிகைத் தலைப்பாகை தரித்து இடுப்பில் சரிகை அங்க வஸ்திரம் கட்டிக்

கொண்டு போவார்கள். இச் சந்தர்ப்பத்தில் ஆடைகளைப் பற்றிய கவனம் அதிகம்.

சரியாகமாலை ஆறு மணிக்கு, அரசர் தர்பார் மண்டபத்தில் நுழைவார்; சிங்காதனத்தை வலம் வந்து தீபாராதனை செய்து ஆசனத்தில் அமர்வார். பிறகு விஜயம் செய்திருக்கும் கனவான்கள் சிறிது தூரத்திலிருந்து அரசரை நமஸ்கரித்து, ஆசனம் சேர்வார்கள். அவர்களுக்குச் சந்தனம் புஷ்பம் தாம்பூலம் வழங்கப் படும்.

அரசர்முன், வெளிப்புறத்திலே, குஸ்தி, பாணக்கழி விளையாட்டு, சிறு பிள்ளைகளின் கூத்து, பொய்க்கால் கட்டி நடத்தல் முதலான வேடிக்கைகள் நடைபெறும். சமஸ்தானத்தைச் சார்ந்த வித்துவான்களின் சங்கீதக் கச்சேரியும் சிறிது நேரம் நடைபெறும்.

கடைசியாகப் பட்டத்துக் குதிரையும் யானையும் அரசன்முன் கொண்டுவரப் படுகின்றன. அரசருக்கு அர்ச்சனை செய்வதுபோல், யானை தன் துதிக்கையால் மலர்களை யெடுத்து மண்டபத்தை நோக்கித் தூவும்.

இவ்வாறு நவராத்திரி முழுமையும் தர்பார் நடைபெறும். சரஸ்வதி பூஜையன்று, இச் சமஸ்தானத்தில் ஐரோப்பிய கனவான்களுக்காக ஒரு தர்பார் நடைபெறுவதுண்டு.

## 8. விஜய தசமி

### பண்டிகையின் பத்தாம் நாள்

தசராப் பண்டிகையின் பத்தாவது நாளாகிய விஜய தசமி நமது நாட்டாருக்கு ஒரு முக்கிய நாளாகும்.

இந்நாளிலேதான் பொறுமை கொண்ட பஞ்சபாண்டவர்கள் விராட நகரத்திலே தங்கள் அஞ்ஞாத வாசத்தைக் கழித்தபின் மீண்டும் ஆயுதபாணிகளாய்க் கௌரவர்களின் கொடுமையை ஒழித்துவிட வேண்டுமென்று சங்கற்பஞ் செய்து கொண்டார்கள். இந்நாளிலே தான், இராமபிரான் இராவணன் முதலான கொடிய அரக்கர்மீது படையெடுத்துச் சென்றார். இப் புண்ணிய தினத்திலேதான், சிவாஜி மகாராஜா, தேவியின் அருளால் திக்விஜயஞ் செய்யப் புறப்பட்டார்.

இவ்விசேஷ தினத்திலே பழைய அரசர்கள், பரிவாரங்களோடு வந்து அம்பு போட்டுப் பழகுவதுண்டு. இப்பழைய வழக்கம் இன்றும் புதுக்கோட்டை மைசூர் முதலான சுதேச சமஸ்தானங்களிலும் தேவாலயங்களிலும் ஒருவாறு அனுஷ்டிக்கப்படுகிறது. புதுக்கோட்டை அரசர் அம்புபோடுவதற்காகத் தமது சமஸ்தான

தெய்வமாகிய பிரகதாம்பாள் கோவிலுக்குச் சென்று தொழுது வீதி வலம் வந்து அரண்மனை சேர்வார். அங்கே ஒரு தர்பார் நடை பெறும்.

விஜய தசமியன்று, மைசூர் மகாராஜா யுவராஜாவோடு, பட்டத்து யானையின்மீது வீற்றிருந்து, அரண்மனையினின்றும் புறப்பட்டு இராஜ வீதி வழியாக வன்னி மரத்தில் அம்பு எய்வதற்காகப் போவார். இதைப்பார்ப்பதற்குப் பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் கூடுவார்கள்.

சமஸ்தானத்தைச் சேர்ந்த குதிரைப்படைகளும் காலாட்படைகளும் அரண்மனையின்முன் அணி வகுக்கப்படும். பலவகையான உடைகள் அணிந்துள்ள ஆயிரக்கணக்கான படைவீரர்களோடு அரண்மனை உத்தியோகஸ்தர்களும் அங்கே காணப்படுவார்கள்.

வழியில் அநேகர் மகாராஜாவுக்கு மாலை சூட்டி மகிழ்வர். வழியெங்கும் ஜனங்கள் திரள் திரளாகக் கூடியிருப்பார்கள். மகாராஜா சிறிது சிரமம் நீங்கியபின் உடை மாற்றி ஓர் வெள்ளைக் குதிரையின் மீதேறித் தமது படைகளைக் கண்ணுறுவார். பிறகு நீராடி அம்பு வில் முதலிய ஆயுதங்களுக்கு விதிப்படி பூஜை செய்வார். அப்பால் அரசர் முன்போல் யானைமீது ஏறி அரண்மனைக்குத் திரும்புவார்.

மறுநாள் அரண்மனையில் கலியாண மண்டபத்தில் பழைய முறையில் ஒரு தர்பார் நடைபெறும். அச்சமயம் தகுந்தவர்களுக்குச் சம்மானம் கௌரவபட்டம் முதலியன வழங்கப்படும்.

——

## 9. நாகரிக நவராத்திரி

இப்பொழுது உலகத்தின் பல பகுதிகளிலும் பொருட் காட்சிக்குரிய சபைகள் ஏற்பட்டிருக்கின்றன. இச் சபைகளில் பலவகையான காட்சிப் பொருள்களும் அழகாக வைக்கப்படுகின்றன. இப்பொருட் காட்சிகளைத் தவிர, உயிருள்ள பிராணிகளையும், உயிரற்ற ஜந்துக்களையும் காட்டும் விநோதக் காட்சிக் கட்டடங்களும் இந்நாளிலே உண்டு. இவை யெல்லாம் இந்துக்களுக்கு முற்றும் புதியவை அல்ல.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இவை போன்ற பொருட் காட்சிகளை இந்துக்கள் ஆண்டுதோறும் தங்கள் வீடுகளில் வைத்துக் காண்பித்தார்கள். அழகுப் பொருள்களை ஆனந்தமான காட்சியாக அலங்கரித்து வைக்கும் இவ்வழக்கம் முக்கியமாக நமது பெண் மக்களாலேயே கைக்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது.

இப்படிப்பட்ட வழக்கத்தை விசேஷமாக நவ ராத்திரிப் பண்டிகையில் பார்க்கிறோம்.

இப் பண்டிகை தற்கால நாகரிகத்திற்கு ஏற்றவாறு சென்னை முதலிய நகரங்களில் அபி விருத்தி அடைந்து வருகிறது. அம்மன் கொலுவில் அமைந்திருக்கும் தெய்வப் படங்க ளுக்கும் பொம்மைகளுக்கும் இடையே இயற் கைப் பொருள்களின் பொம்மை உருவங்களையும் வைத்துப் பூஜிப்பது நாகரிக நவராத்திரியில் காணப்படும் காட்சியாகும். நகரவாசிகள் தங்கள் வசதிகளுக்குத் தகுந்தபடி புதுமை புதுமையாக நாகரிகக் கொலு வைப்பதுண்டு.

நகர மக்களில் செல்வர்கள் புதிய பொம் மைக் கொலுவில் பல வேறு இயற்கைக் காட்சி களுக்கு இடையிடையே சிவப்பு, பச்சை, ரோஜா வர்ணங்களில் சிறிய மின்சார விளக்கு கள் தொங்க விடுகிறார்கள். நகர மாதர்கள் தங் களையும் தங்கள் குழந்தைகளையும் விசேஷமாகச் சிங்காரித்துக் கொள்வதுண்டு. அவர்கள் நல்ல உடைகள் விலையுயர்ந்த ஆபரணங்கள் முதலிய வற்றை நாகரிகமாக அணி,ந்து பல இடங்களுக் கும் போய் வருவதற்கு நவராத்திரி தினத்தை ஒரு சந்தர்ப்பமாக உபயோகப்படுத்துகிறார்கள்.

பிள்ளைகளே, சரஸ்வதி பூஜை நவராத்திரிப் பண்டிகையில் முக்கியமான பகுதி என்பதை

நீங்கள் மறந்து விடலாகாது. அறிவைப் பெருக்குவதும், தொழில் முறைகளை அபிவிருத்தி செய்வதும், வாழ்க்கையை அழகு செய்து இன்பம் பெறுவதும், நவராத்திரிப் பண்டிகையின் சாராம்சமான நோக்கமாகும்.

சுருக்கமாகக் கூறுமிடத்து, இப்பண்டிகையை ஓர் ஆனந்தமான கலைவிழாவாகக் கொண்டாடுவது முறையாகும். அப்பொழுதுதான் அறிவுத் தெய்வமாகிய சரஸ்வதிதேவி நமக்கு அனுக்கிரகம் செய்வாள்.

Printed at the Jupiter Press, 16. Sembudoss Street, Madras.